சிமெண்டில் 70:30 என்ற விகிதத்தில் கொடுக்கிறோம். அவர்களுக்குக் கொடுப்பது 2,35,800 மெட்ரிக் டன் என்று சொன்னேன். அதுதான் இங்கே கணக்கில் இருக்கிறது. அதைத்தான் நான் இங்கே எடுத்துச் சொன்னேன்.

Tiruchirappalli Town Cement Stockists

* 144. *Q.*—Thiru A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether it is a fact that Cement stockists in Tiruchirappalli Town, arrested in the second week of September 1980, for alleged offences under the Prevention of Blackmarketing and Maintenance of Supplies of Essential Commodities Act, 1980, were handcuffed and taken to jail; and

(b) if so, the grounds of arrest and the charges that have been framed against the accused?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: (அ) திருச்சிராப்பள்ளி நகரில் வியாபாரிகள் சிமெண்ட் விற்பனையில் சில தவறுகள் நடந்திருப்பதாக 11—9—1980-ல் பதுக்கல் ஒழிப்புப் பிரிவு உணவு புலனாய்வுத் துறை போலீசாரால் கைது செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளூர் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபொழுது கையில் விலங்கிடப்படவில்லை.

(இ) இவ்வழக்கு சம்பந்தமாக பதுக்கல் ஒழிப்புப் பிரிவு புலனாய்வுத் துறை போலீசாரால் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

Thiru A. R. DAMODARAN : Sir, I would like to ask the Hon. Minister what the grounds of arrest were. I have here a report where it is stated that for a technical offence of the godown being located elsewhere, these people were hauled up under the Black-marketing Act. May I know the grounds on which the charges were made?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: சில தகவல்கள் வந்தன. அங்கே விநியோகத்தில் சில முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், அளவுக்கு மேல் சிமெண்ட் ஸ்டாக் வைத்திருந்ததாகவும், அதிலே சில தவறுகள் நடந்ததாகவும் தகவல்கள் வந்தன. அந்தத் தகவல்களின் அடிப்படையிலே அங்கே போய் விசாரித்திருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் முடிவாக 'சார்ஜ் ஷீட்' போடவில்லை. 'எப்.ஐ.ஆர்.' ஸ்டேஜிலே தான் இருக்கிறது. அந்த நிலைமையில்தான் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது.

1981 மார்ச் 21]

THIRU A. R. DAMODARAN: I would like the Hon. Minister to call for a report, because the report that has been given to him is totally false. The licence under the Cement Control Order does not specify the godown where the cement can be stocked. When these dealers were inspected, they said that the godowns were not indicated in the licence. But in spite of this, to harass these dealers, the police have hauled them up under the Black Marketing Act. In fact, from the reply of the Hon. Minister, it appears that the charges are extremely vague. May I know from the Hon. Minister whether he will call for a special report to find out whether these dealers have been unnecessarily harassed in this case ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இன்னும் முழுமையாகச் ' சார்ஜ் ஷீட் ' போடவில்லை. ' எப்.ஐ.ஆர்.' தான் போடப்பட்டிருக்கிறது. சில தகவல்கள் வந்ததன் பேரில் அவர்கள் அங்கே போய் அந்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதுபோல, அவர்கள் அரசுக்கும் சில முறையீடுகளை அனுப்பியிருக்கிறார்கள். அந்த சிமெண்ட் வியாபாரிகள் அசோசியேஷன் அதுபோன்ற முறையீடுகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்பு கொண்டு, விசாரித்து அறிய வேண்டும். தவறான முறையிலே சட்டம் பயன்படுத்தப்பட்டு, தவறாக வியாபாரிகள் துன்புறுத்தப்பட்டிருந்தால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : ' எப்.ஐ.ஆர்.' தான் போடப்பட்டிருக்கிறதே தவிர, இன்னும் சார்ஜ் ஷீட் போடவில்லை என்று சொன்னார்கள். ஏறக்குறைய 7 மாத காலம் ஆகின்றது. இப்போது ' எப்.ஐ.ஆர்.' தான் போடப்பட்டிருக்கிறது. அரசு சார்ஜ் ஷீட் போடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ' சார்ஜ் ஷீட்' போட வேண்டாம், அவர்கள் தவறாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் ஏன் ' சார்ஜ் ஷீட் ' போடவில்லை என்று கேட்கிறார்கள். ' எப்.ஐ.ஆர். போடப்படுவதற்கும் ' சார்ஜ் ஷீட் ' போடுவதற்கும் இடைப்பட்ட காலம் இவ்வளவுதான் இருக்க வேண்டும் என்று எந்தச் சட்டத்திலேயும் இல்லை. எனவே விசாரித்துப் பார்த்து தவறு இருந்தால், ' சார்ஜ் ஷீட்' போடவேண்டிய நேரத்திலே ' சார்ஜ் ஷீட் ' போடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: அரசாங்கம் 'சார்ஜ் ஷீட்' போடுவதாக இல்லை என்று சொன்னால், அந்த வழக்கை அரசாங்கம் திரும்பப் பெற்றிருக்க வேண்டும். அப்படித் திரும்பப் பெறவில்லை. அந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, 'சார்ஜ் ஷீட்' போடுவதா வேண்டாமா என்பதைப்பற்றி அரசு இன்னும் முடிவு எடுக்கவில்லை. ஆகவேதான் சொல்கிறேன். வழக்குப் போடுவதாக இருந்தால், வழக்குப் போடப்படும். 'விதட்ரா' செய்யப்படுவதாக இருந்தால், விசாரித்து செய்யப்படும். அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவெடுக்கப்பட்டுள்ளது:—

23—3—1981	1. 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம். 2. 1980-81 ஆம் ஆண்டு இறுதி துணை விவர அறிக்கையை அளித்தல்.
24—3—1981	1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்.
25—3—1981	1. 1980-81 ஆம் ஆண்டு இறுதி துணை விவர அறிக்கையின் மீது விவாதம். 2. 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்.
26—3—1981 & 27—3—1981	நிதி நிலை அறிக்கையின் மீது பொது விவாதம்.